**தனமல்வில பிரதேச சபை**
**மொனறாகலை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 21 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஜூன் 20 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர்த்து, தனமல்வில பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்கு உடமையான 25 காணித் துண்டுகள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபைக்கு சொந்தமான 48 கட்டிடங்களின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) புறநெகும செயற்திட்டத்தின் மூலம் மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 31,508,354 ஆன நிர்மாணங்கள் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 608,035 ஆன 02 இயந்திரங்கள் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) சபை கட்டிடங்களுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 367,160 ஆன பொருத்திகள் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மீளாய்வாண்டின் போது நிர்மாணிக்கப்பட்ட ரூபா 1,781,547 கூட்டுத்தொகையான பிரதேச சபையின் வாகனத் தரிப்பிடம், புதிய அலுவலகத்தின் வலை வேலி மற்றும் பதிவேட்டு அறையின் இறாக்கைகள் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு செவனகல திண்மக்கழிவுகள் செயற்திட்டத்திற்காக செலுத்த வேண்டிய தொகை ரூபா 339,734 ஆக இருந்த போதிலும், ரூபா 1,114,734 என கணக்கீடு செய்யப்பட்டமையால் ரூபா 775,000 கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஏ) தனமல்வில இளைஞர் படையணி பயிற்சி நிலையத்தைச் சுற்றி கம்பி வேலி நிர்மாணிக்கும் செயற்திட்டத்திற்குரிய ரூபா 198,024 நிறுத்தி வைத்தல் பணம் வைப்புக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டு மீண்டும் நிர்மாணக் கடன்கொடுத்தோரின் கீழும் கணக்கீடு செய்தமையால் அப்பெறுமானத்தினால்

நிர்மாணக் கடன்கொடுத்தோர் கூடுதலாகவும் மிகை குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஐ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய ரூபா 139,922 முத்திரைக் கட்டணம் கூடுதலாக கணக்கீடு செய்தமையால் பெற வேண்டிய முத்திரைக் கட்டணம் மற்றும் வருமானம் அப்பெறுமானத்தினால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஒ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய ரூபா 131,310 தொகையான செலவினம் கணக்கீடு செய்யப்படாமையால் அப்பெறுமானத்தனால் ஆண்டின் செலவினம் மற்றும் கடன் கொடுத்தோர் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தன.

**1.3.2 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**(அ) பெற வேண்டிய கணக்குகள்**

(i) மீளாய்வாண்டிற்குரிய ரூபா 209,287 ஆன முத்திரை வரியை உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மோட்டர் கிரேடர் இயந்திரத்தை கொள்வனவு செய்வதற்கு உள்நாட்டு கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திலிருந்து பெற்றுக்கொண்ட ரூபா 10,000,000 ஆன கடன்தொகைக்கு மீளாய்வாண்டிற்குரிய ரூபா 2,321,083 ஆன கடன் தவணையை கொடுப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாத காரணத்தால் ரூபா 14,532,681 ஆன 03 சொத்து விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தன.

**1.3.4 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 159 ஆம் பிரிவு | 1,917,946 | சபைக்குச் சொந்தமான கடைகளை வாடகைக்கு வழங்கியதாலும் வருடாந்த கேள்வி ஆதனங்களுக்காவும் பெற வேண்டிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 1986 மார்ச் 10 ஆந் திகதிய 392/9 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானி பத்திரம் மற்றும் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்தின் 1985 மார்ச் 20 ஆந் திகதிய 08/01/38 ஆம் இலக்க சுற்றறிக்கை | எந்தவொரு அபிவிருத்தி நடவடிக்கை ஆரம்பிப்பதற்கு முன்னர் அதற்காக உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும், அவ்வாறான அங்கீகாரமொன்று பெற்றுக் கொள்ளாமல் அதிகாரப் பிரதேசத்தில் 44 நிர்மாணங்கள் மேற்கொள்ளப் பட்டிருந்தன. |
| (இ) | 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் 23 ஆம் பிரிவின் நியதிகளின் கீழ் 1533/16 ஆம் இலக்க இலக்க 2008 சனவரி 23 ஆந் திகதிய வர்த்தமானி | முன்னைய ஆண்டுகளின் போது சபையினால் வழங்கப்பட்டிருந்த செல்லுபடிக் காலத்தை கடந்த 35 அனுமதிப்பத்திரங்களை புதுப்பித்து கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஈ) | 2015 யூலை 10 ஆந் திகதிய 02/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 04 ஆம் பிரிவு | பயன்பாட்டிற்கு எடுக்கப்படாத சொத்துக்களை 2015 ஒக்தோபர் 10 ஆந் திகதிக்கு முன்னர் கைதவிர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் சபைக்குச் சொந்தமான பயன்படுத்தாத உழவு இயந்திரம் தொடர்பில் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. |

## 2 நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 16,231,263 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் செலவினத்தை விஞ்சிய மீண்டுவரும் வருமானம் ரூபா 12,010,379 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரித்தாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| வீதவரி மற்றும் வரி | 60,000 | 51,620 | 51,620 | - | 60,000 | 41,000 | 41,000 | - |
| வாடகை | 11,626,300 | 11,627,700 | 9,709,754 | 1,917,946 | 9,487,350 | 8,142,179 | 6,202,833 | 1,939,346 |
| அனுமதிப்பத்திர கட்டணங்கள் | 1,426,523 | 1,718,949 | 1,718,949 | - | 1,202,000 | 1,134,989 | 1,134,989 | - |
| ஏனைய வருமானம் | 13,292,038 | 22,468,760 | 9,773,678 | 12,695,082 | 14,484,620 | 17,785,870 | 7,043,069 | 10,742,801 |
| மொத்தம் | **26,404,861** | **35,867,029** | **21,254,001** | **14,613,028** | **25,233,970** | **27,104,038** | **14,421,891** | **12,682,147** |

**2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்**

மீளாய்வாண்டில் பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா 35.9 மில்லியனாக இருந்ததுடன் மொத்த வருமானத்தில் ஆண்டின் இறுதி வரையில் ரூபா 21.3 மில்லியன் வருமானம் சேகரிப்பட்டிருந்ததுடன், அது பட்டியலிடப்பட்ட பெறுமானத்தில் 59 சதவீதம் அளவிலான குறைந்த பெறுமதியாக இருந்தது.

**2.2.3 வீதவரி மற்றும் வரி**

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 1090/5 ஆம் இலக்க 1999 யூலை மாதம் 26 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியின் மூலம் தனமல்வில பிரதேச சபை அதிகாரப் பிரதேசம் நகர அபிவிருத்தி பிரதேசமொன்றாக பிசித்தப்படுத்தப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் வீதிவரி பிரிவுகள் இனங்காணப்பட்டு வீதவரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.4 வாடகை**

(அ) தனமல்வில, மொரகட்டிய மற்றும் டங்டுமவில் அமைந்துள்ள 22 கடைகளிலிருந்து வருடக் கணக்காக அறவிடப்படாமல் காணப்படும் ரூபா 921,550 நிலுவை வாடகையை மீளாய்வாண்டிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) முன்னைய ஆண்டுகளின் போது கேள்வி அடிப்படையில் குத்தகைக்கு வழங்கிய ஆதனங்களிலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 918,297 ஆன நிலுவை குத்தகையை மீளாய்வாண்டிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.5 ஏனைய வருமானம்**

(அ) சபைக்குச் சொந்தமான மோட்டார் கிரேடர் மற்றும் கல் ரோல் என்பவற்றை வாடகைக்கு வழங்கியதால் வருடக் கணக்காக அறவிடப்படாமல் காணப்படும் ரூபா 530,149 மற்றும் மீளாய்வாண்டிற்குரிய அறவிடப்பட வேண்டிய ரூபா 1,808,248 தொகையை மீளாய்வாண்டிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபை மூலம் செயற்படுத்தப்படும் ஆனந்தகம மற்றும் நெலும்வெவ ஆகிய 02 நீர் முன்மொழிவுச் செயற்திட்டங்களுக்குரிய மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய ரூபா 388,475 ஆன நிலுவைக் நீர்க் கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.6 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதான செயலாளரிடமிருந்தும் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டியிருந்த நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 9,134,919 மற்றும் முத்திரை கட்டணம் ரூபா 693,259 ஆக இருந்தது.

**2.3 மிகை விதிப்புக்கள்**

பிரதேச சபைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பொறுப்பு வாய்ந்த நபர்களுக்கு எதிராக என்னால் முன்னைய ஆண்டுகளின் போது விதிக்கப்பட்டிருந்த மிகை விதிப்புக்கள் தொடர்பாக 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 378,754 ஆன தொகை ஒன்று அறவிடப்பட வேண்டியிருந்தது.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுச் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல், மக்களின் நலனோம்புகை மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

#### (அ) உப விதிகள்

பிரதேச சபை சட்டத்தின் 126 ஆவது பிரிவின் கீழ் 30 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் பிறப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 05 பிரதான விடயங்களுக்கு மாத்திரம் உப விதிகள் பிறப்பிக்கப்பட்டிருந்தன.

#### (ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்

விதிக்கப்பட்ட உப விதிகளின் பிரகாரம் சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகள் தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

#### (இ) திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்

(i) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 1816/43 ஆம் இலக்க 2013 யூன் 28 ஆந் திகதிய வர்த்தமானி பத்திரத்தின் மூலம் பிரசுரிக்கப்பட்ட ஊவா மாகாண உப விதிகளை பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும் அதன் 13 ஆவது பகுதியின் 2 ஆம் பிரிவின் பிரகாரம் கழிவுப்பொருள் வரி விதிக்கப்பட்டு கழிவுப் பொருள் முகாமைத்துவ செலவினத்தை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) செவனகல மற்றும் தனமல்வில நகரங்களிடமிருந்து நாளாந்தம் சேரும் கழிவுகளில் உக்காத கழிவுகளை முறையற்ற விதத்தில் வெளியேற்றியிருந்தமையால் டெங்கு போன்ற தொற்று நோய்கள் பரவும் அபாயம் காணப்பட்டது.

(iii) 2008 சனவரி 25 ஆந் திகதி 1533/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் பிரகாரம் தனமலவில் மற்றும் செவனகல எக்ஸ்போட் பிரிவு மற்றும் கழிவு வெளியேற்றும் காணிக்காக மத்திய சுற்றாடல் அதிகார சபையிடமிருந்து அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### (உ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

நிலைபேரான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பான 2030 நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் சபை அறிந்துகொள்ளாமையால் அந் நோக்கங்களுக்கான உலகலாவிய குறிகாட்டிகள் மூலம் சபை அதிகாரப் பிரதேசத்தில் பொது மக்களின் வாழ்க்கை நிலைமை மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்டகாலத் திட்டம் 2018 மே 23 ஆந் திகதி அளவிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

(அ) புறநெகும செயற்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட புதிய பிரதேச சபை கட்டிடங்களின் நூலகத்திற்காக ஒதுக்கப்பட்ட 1128 சதுரஅடி அளவிலான அறை மற்றும் ரூபா 760,400 ஆன உபகரணங்கள் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையினால் 2014, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் அங்கீகரிக்கப்பட்டிருந்த 60 கட்டிட திட்டங்களை பரீட்சித்து இணக்கச் சான்றிதழ் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) செயற்பாட்டு மட்டத்தில் காணப்படாத 15 நூலகங்களில் காணப்பட்ட ரூபா 522,418 பெறுமதியான 3044 புத்தகங்களும் ரூபா 210,000 பெறுமதியான 28 நூலக இரக்கைகளும் மீண்டும் சபைக்கு பொறுப்பேற்கப்பட்டிருக்கவில்லை.

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.3.1 கையேற்கப்படாத சொத்துக்கள்

98 மயானங்களின் உரித்தை கையேற்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.4 பெறுகைகள்

### 3.4.1 பெறுகை திட்டம்

மீளாய்வாண்டிற்காக பிரதேச சபையினால் வருடாந்த பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 04. நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

## 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்குரித்தாக பிரதேச சபையின் பாதீடு செய்யப்பட்ட வருமானம் செலவினம், உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினங்களுக்கிடையே கருத்திற் கொள்ளக்கூடிய விலகல்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு

மீளாய்வாண்டிற்காக சபையினால் போதியளவில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்களை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 05 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது சபையின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதுடன். பின்வரும் கட்டுப்பாட்டு துறைகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் | குறைபாடுகள் |
|---|---|
| (அ) சொத்துக்கள் | (i) பதிவேடுகளுக்கு உட்படுத்தப்படாமை |
| | (ii) காணியை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை |
| (ஆ) செயற்திட்டங்கள் | போதியளவில் மேற்பார்வை செய்யப்படாமை. |